DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.13/2021**
Prosecution witness- **PW.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : Pakir Mohamed | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 05:00 P.M. to 05:05 P.M. | | |

**(Accused absent. Petition U/s.355 BNSS filed and allowed. Respective accused counsel present)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.08.2024

21.08.2024 முதல் விசாரணை

நான் கோவை உக்கடத்தில் குடியிருந்து தோட்ட தொழிலாளர்களை வேலைக்கு அனுப்பும் ஏஜெண்டாக செயல்பட்டு வருகிறேன். வழக்கின் புகார்தாரரான சையது சுலைமானை கடந்த 8 வருடங்களாக தெரியும். 1ம் எதிரி வசந்தி, 2ம் எதிரி மணிமொழி ஆகியோரை நான் இவ்வழக்கின் சம்பவத்தன்று தான் நான் பார்த்துள்ளேன். வழக்கின் விவரம் எனக்கு தெரியும்.

1) 2020ம் வருடம் மார்ச் மாதம் ஒரு தேதியில் குன்னூர் மரப்பாலத்திலுள்ள வாதி சையது சுலைமான் அவர்களது தோட்டத்திற்கு நாற்று கொடுத்ததற்காக பணம் பெறவேண்டி நான் சென்று வாதியிடம் பேசிக்கொண்டிருந்தபோது மாலை சுமார் 03.00 அல்லது 04.00 மணியளவில் எதிரிகள் வசந்தி, மணிமொழி மற்றும் அவர்களுடன் இரண்டு வாலிப பையன்கள் வந்திருந்தார்கள். எதிரிகள் வாதியை பார்த்து வாடா போடா என்று கெட்டவார்த்தைகளால் திட்டி தாங்கள் கொடுத்த தொகை ரூ.30 லட்சத்திற்கு 48 சதவீதம் வட்டி வேண்டுமென்றும் இல்லையென்றால் உனது ஆவணங்கள் எங்களிடம் உள்ளது என்றும் அதை வேறு முதலாளிகளுக்கு கொடுத்துவிட்டு உன்னை அடித்து துரத்திவிடுவோம் என்றும் மிரட்டினார்கள்.

2) நான் சென்று எதிரிகளிடம் ஏன் இப்படி கூச்சல் குழப்பம் செய்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரிகள் நீங்கள் இதில் தலையிடாதீர்கள் என்று கூறிவிட்டு

சென்றுவிட்டார்கள். நான் வாதியிடம் விசாரித்தபோது அவர் எதிரிகளிடம் எந்த ஒரு தொகையும் வாங்கவில்லை என்றும் ஆனால் எதிரிகள் தன்னை மிரட்டுவதாகவும் கூறினார்.

<u>குறுக்கு விசாரணை</u> - (**வாய்ப்பளித்தும் இல்லை**)

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.13/2021**
Prosecution witness- **PW.3**

| | | | |
|---|---|---|---|
| Name | : Ahamad Kabir | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 05:05 P.M. to 05:10 P.M. | | |

**(Accused absent. Petition U/s.355 BNSS filed and allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.08.2024

21.08.2024 முதல் விசாரணை

நான் கோவை உக்கடத்தில் குடியிருந்து தோட்ட வேலைக்கு ஆள் அனுப்பும் ஏஜென்டாக தொழில் செய்து வருகிறேன். வழக்கின் வாதி சையது சுலைமானை எனக்கு தெரியும். வழக்கின் எதிரிகளான வசந்தி மற்றும் மணிமொழியை சம்பவத்தன்று நான் பார்த்துள்ளேன். இந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியும்.

1) 2020ம் வருடம் மார்ச் மாதம் ஒரு தேதியில் நானும் இதற்கு முன்பு சாட்சியளித்த பகீர் முகமதுவும் வாதியின் தோட்டத்தில் நாற்று நடுவதற்காக ஆள் அனுப்பியதற்காக பணம் வாங்க வேண்டி குன்னூர் மரப்பாலத்திலுள்ள வாதியின் தோட்டத்திற்கு சென்று வாதியிடம் பணம் வாங்கி கொண்டிருந்தபோது வழக்கின் எதிரிகளும் அவர்களுடன் இரண்டு பையன்களும் வந்தார்கள். எதிரிகள் வாதியை பார்த்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களுக்குள்ளாக ஏதோ பிரச்சனை என்று விலகி நின்றிருந்தோம். அப்போது எதிரிகள் வாதியை பார்த்து நீ எங்களுக்கு ரூ.30 லட்சம் தரவேண்டும் அதை கொடு என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். மேலும் வருடத்திற்கு 48 சதவீதம் வட்டியை கொடு என்றும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். வாதி அதை மறுத்தபோது அவர்களுக்கிடையே வாக்குவாதம் முற்றியது.

2) வாதியிடம் அவ்வாறு பணம் எதுவும் கொடுக்க வேண்டுமா என்று நாங்கள் கேட்டபோது அவர் எதிரிகளிடம் எந்த ஒரு தொகையும் வாங்கவில்லை என்று கூறினார். பின்னிட்டு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நாங்களும் அங்கிருந்து சென்றுவிட்டோம்.

<u>குறுக்கு விசாரணை</u> - (**வாய்ப்பளித்தும் இல்லை**)

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.